# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 11 | 4 Pages | 12.08.2023 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 11 | 4 பக்கங்கள் | 12.08.2023 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |

## போதைப்பொருள் தடுப்பு விழிப்புணர்வால் தமிழ்நாட்டில் குற்றச்சம்பவங்கள் குறைந்து வருகிறது: மு.க.ஸ்டாலின்



சென்னை, ஆக. 12

சென்னை கலைவாணர் அரங்கில் 'போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு' நிகழ்ச்சி இன்று காலை நடைபெற்றது. இதில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் போதைப் பொருளுக்கு எதிரான உறுதிமொழியை வாசிக்க அதை கல்லூரி மாணவமாணவிகள் திரும்ப வாசித்து உறுதிமொழியை ஏற்றுக் கொண்டனர்.

போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடுஎன்ற அக்கறை மிகுந்த நோக்கத்தோடு கடந்த ஆண்டு இந்தத் திட்டம் தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்டது. போதைப் பொருள்கள் புழக்கத்தை தடுக்க வேண்டும். போதைப் பொருள் விற்பனை மற்றும் கடத்தலில் ஈடுபடுகிறவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும். போதைப் பொருள் புழக்கத்தால் ஏற்படுகின்ற தீமைகளைபற்றி இளம்தலைமுறையினர் இடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

இதுதான் இந்தத் திட்டத்தினுடைய நோக்கங்கள். அதன் காரணமாக, தமிழ்நாட்டில் இத்தகைய குற்றச் சம்பவங்கள் வெகுவாக குறைந்து கொண்டு வருகிறது. அதற்காக, முழுவதுமாக தடுத்துவிட்டோம் என்று சொல்ல வரவில்லை. குறைந்து கொண்டு வருகிறது என்று தான் நான் சொல்கிறேன். அதனால்தான், ஆட்சிக்கு வந்த நாளிலிருந்து, கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களை தடுக்கின்ற நடவடிக்கையில் நாங்கள் தீவிரமாக இறங்கி இருக்கிறோம்.

கடந்த ஆண்டு இந்தத் திட்டத்தை தொடங்கி வைத்து நான் பேசும் போது, 'போதைப் பொருள் விற்பனை சங்கிலியை உடைக்க வேண்டும்; பள்ளி, கல்லூரிகளின் அருகே போதைப் பொருள் விற்பனையைத் தடுக்க தீவிர நடவடிக்கை எடுக்கப் படும்" என்று சொன்னேன். "இந்த நடவடிக்கையில் நான் சர்வாதிகாரி போல செயல்படுவேன்" என்று கொஞ்சம் கடுமையாகவே பேசியிருந்தேன். அந்த அடிப்படையில் தான் அரசும் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. போதைப் பொருளுக்கு எதிரான நடவடிக்கையின் காரணமாக ஆகஸ்ட் 11, 2022 முதல், 154 குற்றவாளிகளுக்கு எதிராக விசாரணை மேற்கொள்ளப் பட்டு, அவர்களிடமிருந்து 18 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்புள்ள 45 அசையும் / அசையா சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டு இருக்கிறது. இதுவரை தமிழ்நாட்டு வரலாற்றில் இல்லாத அளவுக்கு 16 ஆயிரம் கிலோ கைப்பற்றப்பட்ட போதைப் பொருள்கள் அழிக்கப் பட்டிருக்கிறது. இந்த ஓராண்டில், குற்றம் சாட்டப்பட்டவர்களில் 5,184 வங்கிக் கணக்குகள் முடக்கப் பட்டிருக்கிறது. கஞ்சா சாகுபடி இல்லாத தமிழ்நாடு என்ற நிலையை தமிழ்நாடு இப்போது தொடர்ந்து பராமரித்து கொண்டு வருகிறது. ஆந்திரப் பிரதேசம், ஒடிசா, தெலுங்கானா மற்றும் இந்தியாவோட வடகிழக்கு மாநிலங்களிலிருந்து கஞ்சா கடத்தப்படுவதை கவனத்துல வைத்து, அதை தடுக்குற வகையில் பல்வேறு நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகிறோம். ஒரு சில மாநிலங்களில் இருப்பதுபோல மோசமான நிலைமை தமிழ்நாட்டில் இல்லை இன்று எல்லா கல்வி நிறுவனங்களிலும், மாபெரும் போதைப் பொருள் எதிர்ப்பு உறுதி மொழிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அரசுஅலுவலர்கள், கல்வி நிறுவனங்கள், மாணவர்கள் என்று நம் எல்லோரும் போதைப்பொருள் இல்லாத தமிழ்நாட்டிற்காக அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார். நிகழ்ச்சியில் அமைச்சர்கள் பொன்முடி, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர் பாபு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தாயகம் கவி எம்.எல்.ஏ., உள்துறை செயலாளர் அமுதா, டி.ஜி.பி. சங்கர் ஜிவால் மற்றும் போலீஸ் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.


## ஈக்வடார் அதிபர் வேட்பாளர் கொலை தொடர்பாக 6 வெளிநாட்டினர் கைது



ஈக்வடா, ஆக. 12

தென்அமெரிக்க நாடான ஈக்வடாரில் அதிபர் தேர்தல் வருகிற 20ந்தேதி நடைபெற உள்ளது. இதில் 8 பேர் போட்டியிடுகிறார்கள். அவர்களில் பெர்னாண்டோ வில்லிவிசென்சியோவும் ஒருவர். பத்திரிக்கையாளரான அவர் ஊழலுக்கு எதிராக தொடர்ந்து குரல் கொடுத்து வந்தார். அதிபர் தேர்தலில் களம் இறங்கிய பெர்னாண்டோ தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வந்தார். தலைநகர் குயிட்டோவில் நடந்த பொதுக்கூட்டத்தில் அவர் கலந்து கொண்டு பேசினார். பின்னர் தேர்தல் பிரசாரத்தை முடித்து க் கொண்டு புறப்பட்ட பெர்னாண்டோ காரில் ஏறினார். அப்போது கூட்டத்தில் இருந்த மர்ம நபர் ஒருவர் பெர்னாண்டோவை நோக்கி துப்பாக்கியால் சுட்டார். இதில் அவர் ரத்த வெள்ளத்தில் சரிந்து உயிரிழந்தார். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது. போலீசார் குற்றவாளிகளை தீவிரமாக தேடிவந்த நிலையில், தலைநகர் குயிட்டோவில், ஆயுதங்களுடன் ஒரு வீட்டில் பதுங்கியிருந்த ஆறுபேரை கைது செய்துள்ளனர். ஆறு பேரும் வெளிநாட்டினர் எனத் தெரியவந்துள்ளது. இந்த கொலை பயங்கரவாத தாக்குதலான அரசியல் குற்றம் என விவரித்த, ஈக்வடார் அதிபர், அவர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கவில்லை. இதற்கிடையே நாடு முழுவதும் 60 நாட்களுக்கு அவசர நிலை பிரகடனம் பிறப்பிக்கப்பட்டு உள்ளது.

## ரஷியாவின் லூனா25 விண்கலம் விண்ணில் செலுத்தப்பட்டது



ரஷ்யா, ஆக. 12

இந்தியா சந்திரயான்3 விண்கலத்தை நிலவின் தென்துருவத்தை ஆராய விண்ணில் செலுத்தியுள்ளது. வருகிற 23ந்தேதி விண்கலம் நிலவில் தரையிறங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சந்திரயான்3 போன்று நிலவின் தென்துருவத்தை ஆராய ரஷியா லூனா25 என்ற விண்கலத்தை உருவாக்கியது. இந்த விண்கலம் ராக்கெட் மூலம் இன்று விண்ணில் ஏவப்பட்டது. இந்த விண்கலம் 5 நாட்கள் பயணம் செய்து நிலவின் சுற்றுவட்டப் பாதையை அடையும் என்றும், பின்னர் 5 முதல் 7 நாட்கள் சுற்றுவட்டப் பாதையில் பயணம் செய்து நிலவில் தரையிறங்கும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்தியாவின் சந்திரயான்3 விண்கலம் நிலவில் தரையிறங்கும் அதே நாளில் ரஷியாவின் லூனா25 விண்கலம் தரையிறங்குகிறது. இதற்காக மூன்று இடங்களை ரஷிய விஞ்ஞானிகள் தேர்வு செய்துள்ளனர். ரஷியாகடந்த 1976ம் ஆண்டு முதல்முதலாக நிலவுக்கு விண்கலத்தை அனுப்பியது. அதன்பின் 47 ஆண்டுகளுக்குபிறகுதற்போது விண்கலத்தை அனுப்ப உள்ளது. நிலவில் மாதிரிகளை சேகரித்து நீர் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கிறதா? என்று லூனா25 ஆய்வு செய்யும் என்றும் 2021ம் ஆண்டே விண்கலத்தை ஏவ திட்டமிட்டு, பல்வேறு காரணங்களால் தாமதம் ஏற்பட்டதாகவும் விஞ்ஞானிகள் தெரிவித்தனர். சந்திரயான்3 விண்கலத்துக்கு முன்பாக லூனா25 விண்கலத்தை நிலவில் தரையிறக்க திட்டமிட்டுள்ளனர்.

## ஹவாய் காட்டுத்தீ பெரிய பேரழிவு அதிபர் ஜோ பைடன் அறிவிப்பு



வாஷிங்டன், ஆக. 12

அமெரிக்காவின் ஹவாய் தீவுக் கூட்டங்களில் ஒன்று மவுயி தீவு. இங்கு பயங்கர காட்டுத் தீ பரவியுள்ளது. பிரபல சுற்றுலா நகரமான அங்குலஹைனா பகுதியில் கடுமையான காட்டுத் தீ ஏற்பட்டுள்ளது. அங்கு வசிக்கும் 12,000 பேர் வீடுகளில் இருந்து வெளியேறினர். அவர்களை மீட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. காட்டுத் தீயில் இருந்து தப்பிக்க சிலர் கடலில் குதித்தனர்.

வேகமாக பரவி வரும் காட்டுத் தீயில் சிக்கி 36 பேர் பலியாகி உள்ளனர். பலருக்கு தீக்காயம் ஏற்பட்டுள்ளது. ஏராளமான வீடுகள் மற்றும் வணிக வளாகங்கள் எரிந்து சாம்பலாகி உள்ளது.

இந்நிலையில், ஹவாய் தீவில் ஏற்பட்டுள்ள காட்டுத்தீயை பெரிய பேரழிவு என அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அறிவித்துள்ளார். காட்டுத் தீயை அணைக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மீட்புப் பணிகளுக்கு ராணுவத்தை அனுப்ப அதிபர் ஜோ பைடன் உத்தரவிட்டுள்ளார்.

## மகளிர் மேம்பாட்டு நிறுவன திட்டங்களை அறிய வாழ்வாதார உதவி அழைப்பு எண்ணை தொடர்பு கொள்ளலாம்: கலெக்டர் அறிவிப்பு



திருப்பூர், ஆக. 12

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் மகளிர் வாழ்வாதாரம் மற்றும் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், தீன் தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் போன்ற அரசு திட்டங்கள் குறித்து பொதுமக்களுக்கு எழும் கேள்விகள், சந்தேகங்கள் மற்றும் தகவல்களை தெரிந்து கொள்ள வசதியாக 155330 என்ற தொலைபேசி எண் சேவை மையம் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அழைப்பு மையம் அனைத்து வேலைநாட்களிலும் காலை 9.30 மணி முதல் மாலை 6.30 மணி வரை செயல்படும். தமிழகத்தின் எந்த பகுதியில் இருந்தும் தொலைபேசிஅல்லது செல்போன் மூலமாக இந்த அழைப்பு எண்ணை தொடர்பு கொண்டு திட்ட விவரங்களை எந்த வித கட்டணமும் இன்றி பெற முடியும். குறிப்பாக கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் சுயஉதவிக்குழுக்கள் அமைத்தல், வங்கி கடன் உதவி பெறுதல், சுழல்நிதி பெறுதல், பயிற்சிகள், கணக்கு பராமரிப்பு, வாழ்வாதாரம் தொடர்பான திட்ட விவரங்கள், சுயஉதவிக்குழுக்கள் மூலம் குழுவாக தொழில் தொடங்குதல், உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்துதல், வேளாண் கருவிகள் வாடகைக்கு விடுதல், பெறுதல் ஆகியவை குறித்தும் விளக்கம் பெறலாம். 18 வயது முதல் 35 வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள்சுயதொழில் மேற்கொள்ள ஊரக சுயவேலை வாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் மூலமாக வழங்கப்படும் பயிற்சிகள் குறித்தும் அறிந்துகொள்ளலாம். பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பு பெற விரும்பும் கிராமப்புற இளைஞர்கள், தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி திட்டத்தின் கீழ் வழங்கப்படும் குறுகிய கால பயிற்சிகள், பயிற்சி மையங்கள், தகுதிகள், பயிற்சியின்போது வழங்கப்படும் வசதிகள் குறித்தும் தகவல் பெறலாம். இந்த தகவலை திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜ் தெரிவித்துள்ளார்.

## உடுமலை பகுதியில் கால்நடைகளுக்கான பெரியம்மை நோய் தடுப்பூசி முகாம்

உடுமலை, ஆக. 12

விவசாயிகள் மற்றும் நிலமற்ற தொழிலாளர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு கால்நடை வளர்ப்பு முக்கிய பங்கு வைக்கிறது. கல்லாபுரம் ஊராட்சி வேல் நகரில் நடைபெற்ற தடுப்பூசி முகாமை உதவி இயக்குனர் வே.ஜெயராமன் நேரில் ஆய்வு செய்தார். மேலும் படிக்க உடுமலை: உடுமலை கோட்டத்திற்கு உட்பட்ட உடுமலை, குடிமங்கலம், மடத்துக்குளம் வட்டாரங்களில் விவசாயம் முக்கிய தொழிலாக உள்ளது. விவசாயிகள் மற்றும் நிலமற்ற தொழிலாளர்களின் பொருளாதார வளர்ச்சிக்கு கால்நடை வளர்ப்பு முக்கிய பங்கு வைக்கிறது. அதில் பெரும் சவாலாக இருப்பது தொற்று நோய்களாகும்.அவற்றில் இலம்பி தோல் அலற்சி நோய் என்று அழைக்கக்கூடிய பெரியம்மை நோயை உடுமலை கோட்டத்தில் கட்டுப்படுத்தும் விதமாக மாவட்ட கலெக்டர் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குனர் அறிவுரையின்படி பெரியம்மை நோய் தடுப்பூசி செலுத்தும் பணி கடந்த 8 ந் தேதி முதல் தொடங்கி உள்ளது. கல்லாபுரம் ஊராட்சி வேல் நகரில் நடைபெற்ற தடுப்பூசி முகாமை உதவி இயக்குனர் வே. ஜெயராமன் நேரில் ஆய்வு செய்தார். அதைத்தொடர்ந்து அவர் கூறுகையில், ஒவ்வொரு குக்கிராமங்கள் தோறும் கால்நடை மருத்துவர் குழுவினரால் முகாம் அமைத்து பெரியம்மை நோய் தடுப்பூசி போடும் பணிகள் நடைபெற உள்ளது.கால்நடை வளர்ப்போர் முகாமினை பயன்படுத்தி கால்நடைகளை பெரியம்மை நோயில் இருந்து பாதுகாத்து கொள்ள வேண்டும். பெரியமை நோய் வைரஸ் கிருமியினால் பரவும் நோயாகும்.இந்த நோய் கொசுக்கள்,உண்ணிகள், ஈக்கள் ஆகியவற்றின் மூலம் ஒரு மாட்டிலிருந்து மற்றொரு மாட்டிற்கு பரவக் கூடியதாகும். அதைத் தடுத்து கால்நடைகளை பாதுகாக்க தடுப்பூசியே சிறந்த வழியாகும். உடுமலை கோட்டத்தில் ஜல்லிபட்டி, மடத்துக்குளம், குடிமங்கலம்,துங்காவி ஆகிய 4 பகுதிகளில் முகாம்கள் நடத்த ஏதுவாக 57 ஆயிரம் டோஸ் மருந்துகள் இறப்பு வைக்கப்பட்டு உள்ளது என்றார்.

## ஊத்துக்குளி அருகே விபச்சார வழக்கில் மேலும் 2 பேர் கைது



ஊத்துக்குளி, ஆக. 12

ஹவுசிங் யூனிட் பகுதியில் விபச்சாரம் நடப்பதாக ஊத்துக்குளி போலீசாருக்கு ரகசிய தகவல் கொடுத்தார். விபச்சாரத்தில் ஈடுபட்ட பெண்களை மீட்டு காப்பகத்துக்கு அனுப்பி வைத்தனர்.

திருப்பூரை சேர்ந்த மோகன்ராஜ் என்பவர் முதலிபாளையம் ஹவுசிங் யூனிட் பகுதியில் விபச்சாரம் நடப்பதாக ஊத்துக்குளி போலீசாருக்கு ரகசிய தகவல் கொடுத்தார்.இதன்பேரில் போலீசார் அப்பகுதிக்கு விரைந்து சென்று சோதனை நடத்தினர். அப்போது சேலம் கெங்கவள்ளி தாலுகா, காட்டுக்கொட்டாய் பகுதியை சேர்ந்த ராஜா என்பவரது மகள் சத்யா ( எ) சேர்மக்கனி (வயது 31), ஊத்துக்குளி ஹவுஸிங் யூனிட், டாலர் சிட்டி 2வது வீதியை சேர்ந்த தங்கவேல் என்பவரது மகன் குமார் (எ) செந்தில்குமார் ( 41), நாகப்பட்டினம் மாவட்டம், பிரிஞ்சிமூளை, காடைதந்தி, லெனின் தெருவை சேர்ந்த சுந்தரையா மகன் அகிலன் ( 23) மற்றும் நாகேந்திரன்கோபு மகன் விஸ்வந்த் ( 23) ஆகியோர் பெண்களை வைத்து விபச்சாரம் செய்ததாக தெரிய வந்தது. விபச்சாரத்தில் ஈடுபட்ட பெண்களை மீட்டு காப்பகத்துக்கு அனுப்பி வைத்த போலீசார் 5 புரோக்கர்களாக செயல்பட்ட 5 பேரையும் கைது செய்து சிறையில் அடைத்தனர். மேலும் இதில் தொடர்புடைய 2 பேரை போலீசார் வலைவீசி தேடி வந்தனர். இந்த நிலையில் ஹவுசிங் யூனிட்டை சேர்ந்த பாண்டி ( 40), நாச்சிபாளையத்தை சேர்ந்த சுரேந்தர் ( 45) ஆகியோரை போலீசார் கைது செய்தனர். பின்னர்அவர்களைதிருப்பூர்கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

## மதுரை அ.தி.மு.க. பொன்விழா எழுச்சி மாநாடு

# 8வது அதிசயமாக அமையும் ஆர்.பி.உதயகுமார் பேட்டி

மதுரை, ஆக. 12

பொதுமக்களுக்கு மரக்கன்று வழங்கி விளம்பர லோகோவை முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் வழங்கினார். இந்திய அளவில் யாரும் மாநாட்டிற்காக இதுபோன்ற பந்தல் அமைத்ததில்லை.



அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் மதுரையில் வருகிற 20ந்தேதி நடைபெறும் வீர வரலாற்றின் பொன்விழா எழுச்சி மாநாட்டிற்கு பொதுமக்களைபங்கேற்கச்செய்யும் வகையில், ஜெயலலிதா பேரவை சார்பில் உசிலம்பட்டியில் பொதுமக்களுக்கு மரக்கன்றுகள், விளம்பர லோகோ வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. பொதுமக்களுக்கு மரக்கன்று வழங்கி விளம்பர லோகோவை முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயகுமார் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் மாநில ஜெயலலிதா பேரவை துணைச் செயலாளர் வெற்றிவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.எஸ். சரவணன், கே.தமிழரசன், உட்பட பலர் கலந்து கொண்டனர். பின்னர் ஆர்.பி.உதயகுமார் நிருபர்களிடம் கூறியதாவது: அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடியார் தலைமையில் பொன்விழா எழுச்சி மாநாடு 65 ஏக்கர் பரப்பளவில் நடைபெறுகிறது. இதில் 35 ஏக்கரில் உணவு கூடங்கள் அமைக்கப்பட்டு வருகிறது. 25 லட்சம் பேர் பங்கேற்கும் வகையில் சிறப்பான வகையில் ஏற்பாடுகள் தயாராகி வருகிறது. இந்த மாநாட்டின் அனைத்து நகர்வுகளும் நாள்தோறும் எடப்பாடியாரின் தகுந்த வழிகாட்டுதலில் நடைபெற்று வருகிறது. இதில் பங்கேற்கும் அனைவருக்கும் காலை முதல் இரவு வரை சுடச்சுட உணவு வழங்கப்பட்டு கிறது. இந்த மாநாட்டுக்காக மூன்று லட்சம் சதுர அடியில் பந்தல் போடப்பட்டது. இதனை தொடர்ந்து வெயில் தாக்கம் அதிகமாக இருப்பதால் தொண்டர்கள் வெயிலில் வாடக்கூடாது என்று எடப்பாடியார் ஆணையின் படி கூடுதலாக வலது புறமும், இடதுபுறமும் தலா ஒரு லட்சம் சதுரடியில் பந்தல் போடப்பட்டு வருகிறது. ஏறத்தாழ ஐந்து லட்சம் சதுரடியில் பந்தல் அமைக்கப்பட்டு வருகிறது. இந்திய அளவில் யாரும் மாநாட்டிற்காக இதுபோன்ற பந்தல் அமைத்ததில்லை. இந்த மாநாட்டில் கலந்து கொள்ள சேலம், நாமக்கல், கோவை, கிருஷ்ணகிரி, வேலூர், கரூர், கன்னியாகுமரி, தென்காசி, திண்டுக்கல், விருதுநகர், நெல்லை, தேனி உள்ளிட்ட 40 மாவட்டங்களில் இருந்து வரும் வாகனங்கள் கப்பலூர் டோல்கேட் வழியாகவும், சென்னை, விழுப்புரம், செங்கல்பட்டு, திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சை, நாகப்பட்டினம், திருவாரூர், திருப்பத்தூர், சிவகங்கை ராமநாதபுரம் உள்ளிட்ட 30 மாவட்டங்கள் விரகனூர் பைபாஸ் வழியாகவும், தூத்துக்குடி உள்ளிட்ட 5 மாவட்டங்களில் வரும் வாகனங்கள் வலையங்குளம் ரிங்ரோடு வழியாகவும் வருகின்றன. இந்த வாகனங்களை நிறுத்தும் வகையில் 13 இடங்களில், 300 ஏக்கரில் வாகன நிறுத்துமிடம் உருவாக்கப்பட்டுள்ளது. உலக அதிசயம் ஏழாக இருந்தாலும் எடப்பாடியார் உரையாற்றும் போது,

இந்த மாநாடு 8வது உலக அதிசயமாக திகழும். பாராளுமன்ற கூட்டத்தில் பாரதப் பிரதமர் கட்சத் தீவை தாரை வார்த்தது தி.மு.க. தான் என்று தி.மு.க.வின் துரோகத்தை அம்பலப்படுத்தி விட்டார். அதனைத்தொடர்ந்து மணிப்பூர் சம்பவம் குறித்து கனிமொழி பேசிய போது, அப்போது மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன், 1989ம் ஆண்டு சட்டமன்றத்தில் ஜெயலலிதாவை சேலையை பிடித்து அவமானப்படுத்திய சம்பவத்தை நினைவு கூர்ந்து, அவருக்கு நடந்த கொடுமையை, அவமானத்தை எடுத்துரைத்தார். புரட்சித்தலைவி அம்மா அப்போது நான் மீண்டும் சட்டசபைக்கு முதலமைச்சராக வருவேன் என்று சபதம் போட்டார். அதனைத் தொடர்ந்து மீண்டும் தமிழகத்தின் முதலமைச்சராக தான் சட்டமன்றத்திற்குள் நுழைந்தார். தி.மு.க. ஆட்சியில் பெண்களுக்கு நடந்த கொடுமைகளை டெல்லியில் தோலுரித்துக் காட்டினார். பெண்கள் மீது பாசம் உள்ளது போல தி.மு.க. நாடகம் போடுகிறது. அம்மாவின் தைரியத்தை டெல்லியில் பாராளுமன்றத்தில் நிர்மலா சீதாராமன் தைரியமாக எடுத்துரைத்தார். எடப்பாடியார் தலைமையில் மீண்டும் அம்மாவின் ஆட்சி மலரும் வகையில், தமிழகத்தில் ஆட்சி மாற்றத்திற்கான கால்கோள் விழாவாக மதுரை மாநாடு அமையும். இவ்வாறு அவர் கூறினார்.

# சத்தி. அருகே காலி குடங்களுடன் மக்கள் சாலை மறியல்

சத்தியமங்கலம், ஆக. 12

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் அடுத்த சாஸ்திரி நகர் பகுதியில் 100க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இங்கு கடந்த 10 நாட்களாக முறையாக குடிநீர் விநியோகிக்க ப்படவில்லை என கூறப்படுகிறது. இதனால் அப்பகுதி மக்கள் கடும் அவதி அடைந்து வந்தனர். இந்நிலையில் இன்று காலை 9 மணி அளவில் அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள் காலி குடங்களுடன் ஒன்றாக திரண்டு வந்து சத்திமேட்டுப்பாளையம் சாலையில் திடீரென அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அந்த வழியாக சென்ற வாகனங்கள் சாலையின் இருபுறம் நீண்ட தூரம் அணிவகுத்து நின்றன. இந்ததிடீர்சாலை மறியலால் பள்ளிக்கு சென்ற மாணவர்கள், வேலைக்கு சென்ற பணியாளர்கள், வியாபாரிகள் கடும் அவதி அடைந்தனர். இதுகுறித்து பவானிசாகர் போலீசாருக்கும் மற்றும் அதிகாரிகளுக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். எங்கள் பகுதியில் கடந்த 10 நாட்களாக சரியாக குடிநீர் விநியோகிக்கப்படவில்லை. இந்த நாள் வரை நாங்கள் மிகவும் சிரமப்பட்டு வருகிறோம். இது குறித்து பலமுறை அதிகாரிகளிடம் மனு கொடுத்தும் எந்த ஒரு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றனர். இதையடுத்து அதிகாரிகள் உங்கள் பகுதியில் சீரான குடிநீர் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்தனர். இதையேற்று பொதுமக்கள் சாலை மறியல் போராட்டத்தை கைவிட்டு அங்கிருந்து விலகி சென்றனர். இதனால் அந்த பகுதியில் ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.



# அரசு ஆஸ்பத்திரியில் இருந்து 2 குழந்தைகளை கடத்தி சென்ற பெண் அடையாளம் தெரிந்தது

காஞ்சிபுரம், ஆக. 12

உத்திரமேரூர் தாலுக்கா, வெங்கச்சேரி அடுத்த ஆதவம்பாக்கம் கிராமத்தை சேர்ந்த இருளர் சமுதாய கர்ப்பிணி பெண் காமாட்சி (வயது 28) என்பவருக்கு கடந்த செவ்வாய் கிழமை காஞ்சிபுரம் அரசு தலைமை மருத்துவ மனையில், சுகப்பிரசவம் ஏற்பட்டது. காமாட்சியின் கணவர் மூர்த்தி , 4 வயது மகன் சக்திவேல் , மூர்த்தியின் அண்ணன் ஏழுமலை, அவருடைய மனைவி குள்ளம்மா, அவருடைய 7 வயது மகள் சௌந்தர்யா ஆகியோர் காமாட்சிக்கு உதவிகள் செய்வதற்காக காஞ்சிபுரம் அரசு தலைமை மருத்துவ மனையில் உள்ள மகப்பேறு நலப்பிரிவு பிரிவு அருகே தங்கியிருந்தனர். இந்நிலையில் அடையாளம் தெரியாத ஒரு பெண்மணி ஒருவர், மூர்த்தி, ஏழுமலை, குள்ளம்மா மற்றும் சிறார்களுடன் நட்புடன் பழகி வந்துள்ளார். செவ்வாய் கிழமை மாலை 7 மணி அளவில் சிறார்களை அழைத்துக் கொண்டு உணவு வாங்கி தருவதாக அந்த பெண்மணி அழைத்து சென்றார். சென்று வந்த பின்னர் அந்த பெண்மணி, மூர்த்தி என அனைவரும் ஒன்றாக பேசிக் கொண்டிருந்தனர். புதன் கிழமை காலை பிள்ளைகளை காணாததால் பதறி அடித்துக் கொண்டு போய், மனைவி காமாட்சி இடம் தகவல் கூறினர். காமாட்சி அங்குள்ள செவிலியர்கள் மூலமாக மருத்துவமனை நிர்வாகத்திற்கு தகவல் அளித்தார். அதன் பெயரில் விரைந்து வந்த விஷ்ணுகாஞ்சி போலீசார் விசாரணை நடத்தினர். காவல்துறையினரின் விசாரணையில் மூர்த்தி கூறும் போது, மூன்று நாட்களாக ஒரு பெண்மணி எங்களுடன் பழகினார். அவர்தான் என் பிள்ளைகளை கடத்திச் சென்று விட்டார் என தெரிவித்தார். இதனைத் தொடர்ந்து மகப்பேறு நலப்பிரிவு வளாகத்தில் உள்ள கண்காணிப்பு கேமராக்களை காவல் ஆய்வாளர்கள் ஆய்வு செய்தனர். அதில் ஒரு பெண்மணி சந்தேகத்துக்கடமான நிலையில் மகப்பேறு நலப்பிரிவு அருகே வந்து செல்வது கண்டறியப்பட்டது. அதில் அவருடைய முகம் சரியாக தெரியவில்லை. ரெயில்வே சாலை, பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளை சுற்றியும் உள்ள கடைகளில் வைக்கப்பட்டுள்ள சுமார் 200 கேமராக்களை புதன் கிழமை மதியத்திலிருந்து காவல்துறையினர், ஆய்வு செய்தனர். பேருந்து நிலையத்தின் அருகே உள்ள கேமராக்களை ஆய்வு செய்த போது தான் ஒரு பெண்மணி இரண்டு சிறார்களையும் அழைத்து கொண்டு பேருந்து நிலையம் வழியாக ஆடிசன் பேட்டை வரை செல்லும் காட்சி கண்டறியப்பட்டது. அந்த கேமரா புட்பேஜில் கடத்திய பெண்மணியின் முகம் சரியாக தெரியாததால் முகத்தை கண்டறியும் பணியில் ஈடுபட்டனர். நேற்று இரவு கண்காணிப்பு கேமரா ஆய்வு செய்தபோது சிறார்களை கடத்திய அந்த பெண்மணியின் முகம் தெளிவாக காணப்பட்டது. அதில் சுமார் 50 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் சிறார்களை அழைத்துச் செல்வது போல சிசிடிவி கேமராவில் காட்சிகள் பதிவாகி உள்ளது. அதனை தொடர்ந்து பெண்மணியின் புகைப்படத்தை நேற்று இரவு காவல்துறையினர் வெளியிட்டனர். அக்காட்சிகளை கொண்டு சிறார்களை கடத்திய பெண்மணியை கண்டுபிடிக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் எம்.சுதாகர் தலைமையிலும், மாவட்ட காவல் துணை கண்காணிப்பாளர் ஜூலியர் சீசர் தலைமையிலும், ஒன்பது தனிப்படைகள் அமைக்கப்பட்டு கடத்தல்காரியை கண்டு பிடிக்கும் பணியில் காவல் துறையினர் முழு வீச்சுடன் செயல்பட்டு வருகின்றனர். கடத்திய பெண்மணி பற்றிய விவரங்கள் தெரிந்தால் காஞ்சிபுரம் மாவட்ட காவல் கட்டுப்பாட்டு அறை மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு தகவல் தெரிவிக்குமாறு காவல்துறை சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. காவல் கட்டுப்பாட்டு அறை தொடர்பு எண்: 044 27236111, 9498181232. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் 9498100026.







# மயிலாடுதுறையில், செவிலியர்கள் ஆர்ப்பாட்டம்

தரங்கம்பாடி, ஆக. 12

மயிலாடுதுறையில் தமிழ்நாடு அரசு அனைத்து சுகாதார செவிலியர்கள் சங்கம் சார்பில் 14 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் கீதா தலைமை வகித்தார். துணைத் தலைவர் தமிழ்ச்செல்வி செயலாளர் நிர்மலா, பொருளாளர் ஜெயசுதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவி திட்டத்தில் செவிலியர்களுக்கு பணிச்சுமையை குறைக்க வேண்டும், முற்றிலும் பழுதடைந்த துணை மைய கட்டிடத்தில் தங்கியுள்ள செவிலியர்களுக்கு வாடகை பிடித்தம் செய்வதை நிறுத்தவும், ஏற்கனவே பிடித்தம் செய்த தொகையை திரும்ப தரவும் வலியுறுத்தியும், ஐந்து வருடங்கள் பணி முடித்தவர்களுக்கு கிரேட் 2 மற்றும் 10 ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு கிரேடு 1 ஆகவும் அடுத்த கட்ட ஊதிய விகிதத்தில் நிர்ணயம் செய்திட போடப்பட்ட அரசாணையை அமல்படுத்த வேண்டும். கொரோனா காலங்களில் பணிபுரிந்த செவிலியர்களுக்கு ஊக்கத்தொகை வழங்க வலியுறுத்தி உள்ளிட்ட 14 அம்ச கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.



இந்த ஆர்ப்பாட்டத்தில் கிராமப்புற சுகாதார செவிலியர்கள், துணை செவிலியர்கள், பகுதி சுகாதார செவிலியர்கள், சமுதாய சுகாதார செவிலியர்கள் என சுமார் 100 பேர் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர்.

# பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வு கையேடு வழங்கல்

வேதாரண்யம், ஆக. 12

வேதாரண்யம் தாலுக்கா மணக்குடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மகளே உனக்காகதிட்டத்தின் கீழ் பாலியல் துன்புறுத்தலில் இருந்து குழந்தைகளை பாதுகாப்பது குறித்து விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது. நாகப்பட்டினம் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஹர்ஷ்சிங் தலைமை வகித்தார். ஆசிரியர் சரவணன் வரவேற்றார். நிகழ்ச்சியில் பள்ளி குழந்தைகளுக்கு போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் போக்சோ சட்டத்தின் முக்கியத்துவத்தினை உணர்த்தும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும் நிகழ்ச்சியில் பள்ளி குழந்தைகளுக்கு 150 மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் வேதாரண்யம் துணை போலீஸ் சூப்பிரண்டு சுபாஷ் சந்திரபோஸ், இன்ஸ்பெக்டர் ராதாகிருஷ்ணன், பள்ளித் தலைமை ஆசிரியர் ராதை, ஆத்மா குழு உறுப்பினர் மகாகுமார், ஆசிரியர்கள் நாகேந்திரன், சுமன், வேம்பரசி, சுபத்ரா, தாரணி மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். முடிவில் ஆசிரியர் திருமுருகன் நன்றி கூறினார்.



# படகு மூலம் இலங்கைக்கு கடத்த முயன்ற ரூ.5 லட்சம் மதிப்புள்ள 40 பண்டல் பீடி இலை பறிமுதல்

நாகர்கோவில், ஆக. 12

கன்னியாகுமரி கடலோர பாதுகாப்பு குழும போலீஸ் இன்ஸ்பெக்டர் நவீன் தலைமையில் கடலோர பாதுகாப்பு குழும போலீசார் நெல்லை மாவட்டம் கூட்டப்புளி கடற்கரைபகுதியில் உள்ள சோதனை சாவடியில் இன்று அதிகாலை அதிரடி வாகன சோதனையில் ஈடுபட்டு கொண்டிருந்தனர். அப்போது அந்த வழியாக சந்தேகப்படும் படியாக வந்த ஒரு டெம்போவை போலீசார் தடுத்து நிறுத்தினர். ஆனால் அந்த டெம்போ அங்கு நிற்காமல் மின்னல் வேகத்தில் தப்பி சென்றது. இது தொடர்ந்து பாதுகாப்பு குழும போலீஸ் இன்ஸ்பெக்டர் நவீன் தலைமையில் கடலூர் பாதுகாப்பு குழும போலீசார் ஜீப் மூலம் அந்த டெம்போவை துரத்தினார்கள். சினிமாவில் வருவது போல் இந்த காட்சி அமைந்தது. சினிமாவில் வருவதுபோல் இந்த காட்சி அமைந்தது. சுமார் 20 கிலோ மீட்டர் தூரம் துரத்தி சென்று கன்னியாகுமரி அருகே உள்ள சங்கம் தேரி பகுதியில் சுற்றி வளைத்து மடக்கி பிடித்தனர். அதற்குள் அந்த டெம்போவில் இருந்து டிரைவர் குதித்து தப்பி ஓடி விட்டார். அந்த டெம்போவை போலீசார் சோதனை செய்து பார்த்த போது அதில் 40 பண்டல் பீடி இலை கட்டு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. ஒவ்வொரு பண்டலும் 35 கிலோ வீதம் மொத்தம் 1400 கிலோ பீடி இலை இருந்தது தெரிய வந்தது. இதைத் தொடர்ந்து டெம்போவுடன் அந்த பீடி இலையை போலீசார் பறிமுதல் செய்தனர். இதன் மதிப்பு ரூ. 5 லட்சம் இருக்கும் என்று போலீஸ் தரப்பில் கூறப்படுகிறது. மேலும் கன்னியாகுமரி கடற்கரையில் இருந்து கடல் வழியாக படகு மூலம் இலங்கைக்கு இந்த பீடிஇலை பண்டலை கடத்தி சொண்டு செல்ல தற்காக டெம்போவில் கடத்திக் கொண்டு செல்லப்பட்டதா? என்ற கோணத்தில் போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள். சினிமா போல் போலீசார் துரத்திச் சென்று இந்த டெம்போவை மடக்கி பிடித்த சம்பவம் அந்த பகுதியில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது



# பல்லடத்தில் நகர்ப்புற உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு பயிற்சி

பல்லடம், ஆக. 12

பள்ளி வளர்ச்சி குறித்து பயிற்றுநர்கள் பாபு, ஆனந்தஜோதி ஆகியோர் உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்தனர். சாமளாபுரம் பேரூராட்சி தலைவர் விநாயகா பழனிச்சாமி மற்றும் 15 வார்டு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

பல்லடம் வட்டார வள மையத்தில் நகர்ப்புற உள்ளாட்சிபிரதிநிதிகளுக்கான பள்ளி மேலாண்மைக் குழு பயிற்சி முகாம் நடைபெற்றது. மேற்பார்வையாளர் அங்கையர்கன்னி தலைமையில் நடைபெற்ற இந்த பயிற்சி முகாமில், பல்லடம் நகராட்சி தலைவர் கவிதாமணி மற்றும் 17 வார்டு உறுப்பினர்கள், சாமளாபுரம் பேரூராட்சி தலைவர் விநாயகா பழனிச்சாமி மற்றும் 15 வார்டு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு பள்ளி மேலாண்மைகுழு குறித்து பயிற்றுநர்கள் சாரதா, மாரியப்பன் ஆகியோர் பயிற்சி அளித்தனர். மேலும் பள்ளி வளர்ச்சி குறித்து பயிற்றுநர்கள் பாபு, ஆனந்தஜோதி ஆகியோர் உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்தனர்.




நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066


# பெரியம்மை நோய் தடுப்பு ஊசி முகாம்

வேலாயுதம்பாளையம், ஆக. 12

குளத்துப்பாளையம், காளிபாளையம் பகுதிகளில் கால்நடைகளுக்கான பெரியம்மை நோய் தடுப்பூசி முகாம் கால்நடைகளுக்கு புரதம் சத்து நிறைந்த பசுந்தீவன உற்பத்தி குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

கரூர் மாவட்டம் நொய்யல் கால்நடை மருத்துவமனை சார்பில் குளத்துப்பாளையம், காளிபாளையம் பகுதிகளில் கால்நடைகளுக்கான பெரியம்மை நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. முகாமிற்கு கரூர் மாவட்ட கால்நடை பராமரிப்புதுறை மண்டல இணை இயக்குனர் பாஸ்கர் தலைமை தாங்கி தொடங்கி வைத்தார். மண்டல உதவி இயக்குனர் அல்லி அருள்மாறி முன்னிலை வைத்தார். நொய்யல் கால்நடை மருத்துவமனை மருத்துவர் டாக்டர் உஷா தலைமையில் உதவியாளர் மாலதி கொண்ட குழுவினர் முகாமில் கலந்து கொண்ட சுமார் 200க்கும் மேற்பட்ட மாடுகளுக்கு பெரியம்மை நோய் தடுப்பூசி போட்டனர். அதனைத் தொடர்ந்து விவசாயிகளுக்கு கால்நடைகளை தாக்கும் நோய்கள் குறித்தும், கால்நடைகளுக்கு புரதம் சத்து நிறைந்த பசுந்தீவன உற்பத்தி குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.



# பாரத நாட்டின் ஆன்மீக தலைநகரமாக தமிழ்நாடு திகழ்கிறது: கவர்னர் ஆர்.என்.ரவி பெருமிதம்



திருவண்ணாமலை, ஆக. 12

திருவண்ணாமலை கிரிவலப்பாதை காஞ்சி சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் சாதுக்களுடனான சந்திப்பு நிகழ்ச்சியில் கவர்னர் ஆர்.என்.ரவி கலந்து கொண்டார். நிகழ்ச்சியை அவர் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் பேசியதாவது: திருவண்ணாமலை மிகப்பெரிய ஆன்மிக பூமி. இந்திய நாடு மற்ற நாடுகளை போல் அல்ல. மற்ற நாடுகள் எல்லாம் ஆதிக்க சக்திகளால் உருவாக்கப்பட்டவை. இந்தியா அப்படி இல்லை. பாரத நாடு என்பது சாதுக்கள், ரிஷிகளின் தவ வலிமையினால் உருவாக்கப்பட்டது. சனாதன தர்மம் என்பது தனி ஒருவருக்கானது அல்ல, பாரத நாட்டில் உள்ள அனைவருக்கும் உள்ளடக்கியதாகும்.

நான், எனது என்று இல்லாமல் நாம், நமது என்பது தான் சனாதனம் ஆகும். குறுகிய காலங்களாக சனாதனம் அழிவுகளை சந்தித்து வருகிறது. 1947ல் தான் பாரத நாடு உருவானது என்று பலர் எண்ணுகின்றனர். 1947ல் விடுதலை தான் பெற்றோம். தமிழகத்தில் பல பகுதிகளை நான் சுற்றி பார்த்து உள்ளேன். பாரத நாட்டின் ஆன்மிக தலைநகரமாக தமிழ்நாடு திகழ்கிறது என்பதால் பெருமிதம் கொள்கிறேன். அசைவ உணவை விருப்பப்பட்டு சாப்பிடுபவர்கள் எங்கு வேண்டுமானாலும் சென்று சாப்பிடலாம். அதற்கு கிரிவலப் பாதை உகந்த இடமில்லை. கிரிவலப் பாதையில் அசைவ உணவுகளை தவிர்ப்பதற்கு உண்டான தன்னால் முடிந்த நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்படும். இவ்வாறு அவர் பேசினார். அதைத்தொடர்ந்து கவர்னருக்கு சாதுக்கள் சார்பில் நினைவு பரிசு வழங்கப்பட்டது. முடிவில் சாதுக்களுக்கு கவர்னர் அன்னதானம் வழங்கினார்.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 5ஆயிரத்து 385 கனஅடியாக அதிகரிப்பு



மேட்டூர், ஆக. 12

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் தற்போது மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக கர்நாடக மாநிலம் கபினி, கிருஷ்ணராஜசாகர்அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து வருகிறது. இதையடுத்து 2 அணைகளில் இருந்தும் உபரி நீர் வினாடிக்கு 10 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

இதனால் மேட்டூர் அணைக்கு கடந்த 3 நாட்களாக நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து காணப்படுகிறது. நேற்று முன்தினம் வினாடிக்கு 4ஆயிரத்து 654 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்த நிலையில் நேற்று வினாடிக்கு 5 ஆயிரத்து 26 கன அடியாக நீர்வரத்து அதிகரித்தது. இன்று மேலும் அதிகரித்து வினாடிக்கு 5 ஆயிரத்து 385 கனஅடியாக நீர்வரத்து அதிகரித்துள்ளது. இன்று காலை நிலவரப்படி மேட்டூர் அணையின் நீர்மட்டம் 55.79 அடியாக உள்ளது. அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு தொடர்ந்து வினாடிக்கு 7ஆயிரத்து 500 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. அணையில் தற்போது 21.65 டி.எம்.சி. தண்ணீர் மட்டுமே இருப்பு உள்ளது. அணைக்கு வரும் தண்ணீரை விட அதிகளவில் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டு வருவதால் மேட்டூர் அணை நீர்மட்டம் தொடர்ந்து குறைந்து வருகிறது.

அணையில் இருந்து இன்னும் 15.65 டி.எம்.சி. தண்ணீர் மட்டுமே வெளியேற்ற முடியும். மீதி உள்ள 6 டி.எம்.சி. தண்ணீர் குடிநீர்திட்டங்கள் மற்றும் மீன் வளத்திற்கு பயன்படுத்தப்படும்.

தற்போது திறக்கப்பட்டு வரும் தண்ணீர் அளவே தொடர்ந்து திறந்து விடப்பட்டால் இன்னும் 2 வார காலத்திற்கு மட்டுமே குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறக்க முடியும். இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

# தர்மபுரியில் மின் கம்பியை மிதித்த 3 பேர் பலி



தர்மபுரி, ஆக. 12

சாலையில் நடந்து சென்றபோது அறுந்து கிடந்த மின்கம்பியை தெரியாமல் மிதித்ததால் அடுத்தடுத்து 3 பேர் பலியாகினர். கன மழை பெய்ததால் மின் கம்பி அறுந்து விழுந்திருக்கலாம் என தகவல் வெளியாகி உள்ளது. மேலும் படிக்க தர்மபுரி: தர்மபுரி மாவட்டம் காரிமங்கலத்தில் மின் கம்பி அறுந்து விழுந்து தாய், மகன் உள்பட 3 பேர் உயிரிழந்த சோக சம்பவம் நிகழ்ந்துள்ளது. சாலையில் நடந்து சென்றபோது அறுந்து கிடந்த மின் கம்பியை தெரியாமல் மிதித்ததால் அடுத்தடுத்து 3 பேர் பலியாகினர். கனமழை பெய்ததால் மின் கம்பி அறுந்துவிழுந்திருக்கலாம் என தகவல் வெளியாகி உள்ளது. 3 பேரின் உடல் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக தர்மபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த சம்பவம் தொடர்பாக போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மதுரை அ.தி.மு.க. மாநாட்டுக்கு தொண்டர்கள் குடும்பத்துடன் திரண்டு வர வேண்டும்: வி.அலெக்சாண்டர் வேண்டுகோள்




திருவள்ளூர், ஆக. 12

திருவள்ளூர் தெற்கு மாவட்ட அ.தி.மு.க. சார்பில் அம்பத்தூரில் மதுரையில் ஆகஸ்டு 20ந்தேதி நடைபெற உள்ள மாநாடு குறித்து ஆலோசனைக் கூட்டம் மாவட்ட செயலாளர் வி.அலெக்சாண்டர் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட செயலாளர் வி.அலெக்சாண்டர் பேசுகையில், புரட்சித்தலைவி அம்மா தலைமையில் ஒன்றரை கோடி தொண்டர்கள் இருந்ததை தற்போது பொதுசெயலாளர் எடப்பாடியார் தலைமையில் 2 கோடியே 47 ஆயிரம் உறுப்பினர்களாக அதிகரித்துள்ளது. இந்தியாவில் மூன்றாவது பெரிய கட்சியாக அ. தி.மு.க.வை உருவாக்க எடப்பாடியார் வழி வகை செய்தார். கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் மதுரையில் நடைபெறும் அ.தி.மு.க. எழுச்சி மாநாட்டிற்கு குடும்பத்துடன் திரண்டு வர வேண்டும் என்றார். மாவட்ட பொருளாளர் ரவி, ஆவடிகுமார், பகுதி செயலாளர்கள் கே.பி. முகுந்தன், ஜெ.ஜான், சி.வி.மணி, எஸ்.சங்கர், ஹேமேந்திரன், பிரகாஷ், எல்.என்.சரவணன், வக்கீல் அறிவரசன், வக்கீல் பார்த்தசாரதி, சுருளிராஜன் மற்றும் மாவட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள் வட்ட நிர்வாகிகள், பிற அணி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இந்தியாவில் மூன்றாவது பெரிய கட்சியாக அ. தி.மு.க.வை உருவாக்க எடப்பாடியார் வழி வகை செய்தார். சுருளிராஜன் மற்றும் மாவட்ட நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள் வட்ட நிர்வாகிகள், பிற அணி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# குறிஞ்சிப்பாடி புத்து மாரியம்மன் கோவில் செடல் திருவிழா



கடலூர், ஆக. 12

குறிஞ்சிப்பாடி பஸ் நிலையம் அருகே மிகவும் பழமையான புத்து மாரியம்மன் கோவில் உள்ளது. இங்கு ஆண்டுதோறும் ஆடி மாதத்தில் நடைபெறும் செடல் திருவிழா மிகவும் புகழ்பெற்றது. இந்த ஆண்டிற்கான திருவிழா கடந்த 2ந் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. தினசரி காலை மாலை இரு வேளையும் அம்மன் வீதி உலா நடந்தது. இரவில் சிறப்பு கலை நிகழ்ச்சிகள் நடந்து வந்தன. 4ம் சனிக்கிழமையான இன்று காலை செடல் உற்சவம் தொடங்கியது . இதையொட்டி அதிகாலை அம்மனுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடந்தன. அதனைத் தொடர்ந்து பக்தர்கள் தங்கள் வேண்டுதல்களை நிறைவேற்ற செடல் அணிந்து வந்து அம்மனை வழிபாடு செய்தனர். குறிஞ்சிப்பாடி மற்றும் அதன் சுற்றுவட்டாரங்களை சார்ந்த சுமார் 50க்கும் மேற்பட்ட கிராம மக்கள் இந்த செடல் திருவிழாவில் கலந்து கொள்கின்றனர். ஒவ்வொருவரும் தங்கள் வேண்டுதலுக்கு ஏற்ப செடல் அணிந்து கொள்வதோடு ஆடு, மாடு உள்ளிட்ட கால்நடைகளுக்கும் செடல் அணிவித்து நேர்த்திக்கடன் செலுத்தினர். பலர் மாவிளக்கு எடுத்து அம்மைன வழிபாடு செய்தனர். செடல் திருவிழாவை முன்னிட்டு கோவில் அருகே 100க்கும் மேற்பட்ட திருவிழா க்கடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இன்று இரவு வரை உற்சவம் நடைபெறும். குறிஞ்சிப்பாடி போலீசார் பாதுகாப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். நாளை காலை தேரோட்டம் நடைபெறுகிறது வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் வடம் பிடித்து தேரோட்டத்தை தொடங்கி வைக்கிறார் அறநிலையத்துறை அதிகாரிகள், பரம்பரை தர்மகர்த்தாக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கின்றனர்.

# 7 லட்சம் கோடி ரூபாய்க்கு அதிகமான கடன்: சபாநாயகர் அப்பாவு



சென்னை, ஆக. 12

தமிழக சட்டமன்ற சபாநாயகர் அப்பாவு பத்திரிகையாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: மறைந்த கலைஞர் கருணாநிதி ஆட்சியை விட்டு போகும்போது 50 ஆயிரம் கோடி ரூபாய் கடன் இருந்தது. 2021ல் மு.க. ஸ்டாலின் முதலமைச்சராகும்போது 5 லட்சத்து 43 ஆயிரம் கோடி ரூபாயாக கடன் உயர்ந்து இருந்தது. தற்போது 7 லட்சத்திற்கும் அதிகமாக உள்ளது. அதை நாங்கள் மறுக்கவும் இல்லை. மறைக்கவும் இல்லை. தமிழ்நாட்டின் வருவாய்க்கு ஏற்ப எவ்வளவு கடன் வாங்கலாம் என வரையறை உள்ளது. இதை தாண்டி வாங்கவில்லை. இன்னும் அதிகமாக வாங்கலாம். வாங்கும் பணத்தில் கட்டமைப்புகளை உருவாக்கி, வேலை வாய்ப்புகளை உருவாக்கி மூலதனமாக ஆகிறதே தவிர, செலவு செய்யவில்லை. சுதந்திரம் பெற்றதில் இருந்து 2014 வரைக்கும் சுமார் 67 ஆண்டுகளில் இந்தியாவின் மொத்த கடன் 55 லட்சம் கோடி ரூபாய். கடந்த 9 ஆண்டு காலத்தில் 100 லட்சம் கோடி. யார் அதிகமாக கடன் வாங்கியிருக்கிறார் என்று பார்க்க வேண்டும். இவ்வாறு சபாநாயகர் அப்பாவு தெரிவித்தார். நேற்று மதுரை எய்ம்ஸ் குறித்து பாராளுமன்றத்தில் மத்திய நிதிமந்திரி நிர்மலா சீதாராமன் பேசியதாவது: ரூ.1,977 கோடியிலான மதுரை எய்ம்ஸ் ஆஸ்பத்திரிக்கு ரூ.1,627 கோடி ஜப்பான் நிறுவனத்தில் கடன் எடுத்து மத்திய அரசு அதை செலுத்தும். தமிழ்நாடு அரசுக்கு எந்த ஒரு கடன் உபாதையும் இல்லை. மத்திய அரசுக்குத்தான் கடன். தமிழ்நாடு அரசுக்கு இல்லை. மற்ற இடங்களில் கட்டப்படும் எய்ம்ஸ் ஆஸ்பத்திரிகளில் 700 படுக்கைகள்தான் இருக்கும். ஆனால் மதுரையில் 950 படுக்கைகள் இருக்கும். கூடுதலாக தரப்படும் 150 படுக்கைகள் தொற்று நோய் பிரிவுக்கானது. எனவே தமிழ்நாட்டுக்கு கடனும் இல்லை. நிறைய படுக்கைகளும் கிடைக்கும். (அப்போது, எய்ம்ஸ் எப்போ வரும்? என தி.மு.க. உறுப்பினர்கள் கேட்டனர். அதற்கு நிர்மலா சீதாராமன்...) 'இப்போது வரைக்கும் வெட்கமாக இல்லையா? என கேட்டவர்கள், தற்போது கடனை மத்திய அரசு செலுத்தும் என்று சொன்னவுடன் எப்போது வரும்?' என கேட்கிறார்கள். நிலம் எடுக்க தமிழ்நாடு அரசு தாமதப்படுத்தியதால் தான்மொத்ததிட்டமதிப்பு ரூ.1,200 கோடியில் இருந்து ரூ.1,900 கோடியாக உயர்ந்தது. எனவே, பழியை அந்த மாநில அரசுதான் எடுத்துக்கொள்ள வேண்டுமே தவிர, மத்திய அரசு மீது போடக்கூடாது. எனத் தெரிவித்திருந்தார் என்பதுகுறிப்பிடத்தக்கது.

# மழைக்கு ஒதுங்கியபோது சோகம்: மாடி படிக்கட்டு இடிந்து விழுந்து 2 கல்லூரி மாணவர்கள் பலி



தாம்பரம், ஆக. 12

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் அடுத்த தென்னேரி பகுதியை சேர்ந்தவர்பிரென்ச்ஜெபரி தவமணி (வயது 23), சென்னை மீனம்பாக்கம் பகுதியைசேர்ந்தவர்திமோ மில்கி (19), பூந்தமல்லி பகுதியை சேர்ந்தவர் அஸ்வின் (19), சிட்லபாக்கம் பகுதியை சேர்ந்தவர் சாய் கவுசிகன் (19). இவர்கள் 4 பேரும் சென்னையை அடுத்த தாம்பரத்தில் உள்ள மெட்ராஸ் கிறிஸ்தவ கல்லூரியில் பி.எஸ்சி 3ம் ஆண்டு படித்து வந்தனர்.

கல்லூரி முடிந்ததும் இவர்கள் உள்பட 6 பேர் 3 இருசக்கர வாகனங்களில் சேலையூர் போலீஸ் நிலையம் எதிரே உள்ள ஏரிக்கரை தெருவில் சென்று கொண்டிருந்தனர். அப்போது திடீரென மழை பெய்ததால் அவர்கள் அங்கிருந்த பழைய கட்டிடத்தின் மாடி படிக்கட்டுக்கு கீழே சென்று மழைக்காக ஒதுங்கி நின்றனர். திடீரென அந்த மாடி படிக்கட்டு இடிந்து, மழைக்காக ஒதுங்கி நின்ற கல்லூரி மாணவர்கள் மீது விழுந்தது. இதில் பிரென்ச் ஜெபரி தவமணி, திமோ மில்கி, அஸ்வின், சாய் கவுசிகன் ஆகிய 4 பேரும் கட்டிட இடுபாடுக்குள் சிக்கி கொண்டனர். இதனால் அதிர்ச்சி அடைந்த மற்ற 2 மாணவர்களும் ஓடிச் சென்று அங்கிருந்த பொது மக்கள், தாம்பரம் தீயணைப்பு படையினர் மற்றும் சேலையூர் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். அதற்குள் அப்பகுதியை சேர்ந்த பொதுமக்கள், பொக்லைன் எந்திரம் மூலம் கட்டிட இடிபாடுகளை அகற்றி 4 பேரையும் வெளியே மீட்டனர். பின்னர் மீட்கப்பட்ட 4 பேரும் 108 ஆம்புலன்ஸ் மூலம் குரோம்பேட்டை அரசு ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர். ஆனால் மாணவர்கள் பிரென்ச் ஜெபரி தவமணி, திமோ மில்கி ஆகியோர் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லும் வழியிலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். அஸ்வின், சாய் கவுசிகன் ஆகியோர் படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். சம்பவம் குறித்து சேலையூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து பலியான 2 பேரின் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுபற்றி போலீசார் விசாரித்து வருகின்றனர். பலியான மாணவர்களின் உடல்களை பார்த்து அவர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் கதறி அழுதது நெஞ்சை உருக்குவதாக இருந்தது. இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது. சேலையூர் போலீஸ் நிலையம் எதிரில் உள்ள சேலையூர் ஏரிக்கரை பகுதியில் இருசக்கர வாகனங்களில் வரும் இளைஞர்கள் மது அருந்துவது, கஞ்சா புகைப்பது உள்ளிட்ட சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். இந்த நிலையில் தான் கல்லூரி மாணவர்கள் கல்லூரிக்கு சம்பந்தமே இல்லாத இந்த ஏரிக்கரை பகுதியில் வந்து மழைக்கு ஒதுங்கிய போது பலியாகி உள்ளனர். அவர்கள் மது அருந்த வந்தார்களா? என்பது குறித்தும் சேலையூர் போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# கிளாம்பாக்கம் பஸ் நிலையத்தில் இருந்து 3 கட்டங்களாக பஸ்கள் இயக்க ஏற்பாடு



சென்னை, ஆக. 12

சென்னை கிளாம்பாக்கம் புதிய பஸ் நிலையத்தில் நடைபெற்று வரும் பல்வேறு பணிகள் மற்றும் சாலைப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் அமைச்சர் சேகர்பாபு தலைமையில் இன்று நடைபெற்றது. கூட்டத்தில் கிளாம்பாக்கம் புதிய பஸ் முனையத்திலிருந்து பஸ்கள் போக்குவரத்து நெரிசலின்றி செல்வதற்காக சாலை பணிகள், மழைநீர் வடிகால் பணிகள், மருத்துவ வசதிகள் மற்றும் காவல் நிலையம் குறித்து ஆலோசனை செய்தார். மேலும் இக்கூட்டத்தில் பஸ்களை இயக்கும் பணியினை படிப்படியாக இரண்டு அல்லது மூன்று கட்டங்களாக இயக்குவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

சாலை பணிகள், மழை நீர் வடிகால் பணிகள், மருத்துவ வசதிகள் மற்றும் காவல் நிலையம் குறித்து ஆலோசனை செய்தார்.

கூட்டத்தில் பஸ்களை இயக்கும் பணியினை படிப்படியாக இரண்டு அல்லது மூன்று கட்டங்களாக இயக்குவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

இதில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் அபூர்வா, சென்னை பெருநகர்வளர்ச்சிக்குழும உறுப்பினர் செயலர் அன்சூல் மிஸ்ரா, போக்குவரத்து ஆணையர் அ.சண்முக சுந்தரம், தலைமை வனப்பாது காவலர் கீதாஞ்சலி மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# கோவையில் இருந்து 50 சிறப்பு பஸ்கள் இயக்கம்

கோவை, ஆக. 12

தொடர் விடுமுறை நாள்களை முன்னிட்டு சிறப்பு பஸ்கள் இயக்கப்பட உள்ளன. மேலும் படிக்க கோவை, தொடர் விடுமுறைக்கு வெளியூர் செல்லும் பயணிகளுக்கு வசதியாக கோவையில் இருந்து 50 சிறப்பு பஸ்கள் இயக்கப்படுகின்றன. இது தொடர்பாக, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் கோவை கோட்ட மேலாண் இயக்குநர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்ப தாவது: தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து கழகம் கோவை மண்டலத்தின் சார்பாக வார இறுதி நாள்களான நாளை (12ந் தேதி), மற்றும் ஞாயிறு (13ந் தேதி), சுதந்திர தினமான ஆகஸ்டு 15ந் தேதி ஆகிய தொடர் விடுமுறை நாள்களை முன்னிட்டு கோவை மற்றும் சுற்றுப்புற ஊர்களில் இருந்து மதுரை, தேனி, திருச்சி, சேலம், ஊட்டி போன்ற ஊர்களுக்கு சென்று மீண்டும் ஊர் திரும்பும் விதமாக ஏற்கெனவே இயக்கப்பட்டு வரும் பஸ்களுடன் கூடுத லாக 50 சிறப்பு பஸ்கள் வருகிற இன்று முதல் இயக்கப்பட உள்ளன என அதில் தெரிவிக்கப்பட்டு ள்ளது.

# திண்டுக்கல் அருகே மின்சாரம் தாக்கி கல்லூரி மாணவர் பலி

திண்டுக்கல், ஆக. 12

திண்டுக்கல் மாவட்டம் எரியோடு அருகே குண்டாம்பட்டி, அண்ணா நகர் பகுதியை சேர்ந்தவர் நாகராஜன். அதே பகுதியில் பேக்கரி வைத்து நடத்தி வருகிறார். இவரது மனைவி முனீஸ்வரி. இவர்களது மகன் சுதர்சன் சக்திவேல் (18). தனியார் கல்லூரியில் பொறியியல் முதலாம் ஆண்டு படித்து வந்தார். இந்நிலையில் கணவன்மனைவி இருவரும் பேக்கரிக்கு சென்று விட்டனர். வீட்டில் தனியாக இருந்த சுதர்சன், பாத்ரூமில் உள்ள சுவிட்ச் அழுத்திய போது எதிர்பாரத விதமாக மின்சாரம் தாக்கி கீழே விழுந்தார். இவரது அலறல் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் வந்து பார்த்தனர். அங்கு மயங்கி கிடந்த இவரை மீட்டு திண்டுக்கல் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவம னைக்கு கொண்டு வந்தனர். அங்கு பரி சோதனை செய்த டாக்டர்கள் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரி வித்தனர். இதனை அடுத்து பிரேத பரி சோதனை க்காக சுதர்சன் உடல் மருத்துவ மனையில் வைக்க ப்பட்டு ள்ளது. இச்சம்பவம் குறித்து எரியோடு போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திரையுலகில் ராதிகாவின் 45 ஆண்டுகள் இடைவிடாத சாதனை.. கேக் வெட்டி கொண்டாட்டம்..



தமிழ் திரையுலகின் முன்னணி நடிகையான ராதிகா 1978ஆம் ஆண்டு இயக்குனர் பாரதிராஜா இயக்கத்தில் வெளியான 'கிழக்கே போகும் ரயில்' திரைப்படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் கதாநாயகியாக அறிமுகமானார். இப்படத்தில் இடம்பெற்றிருந்த 'பூவரசம்பூ பூத்தாச்சு' பாடல் இன்று வரை ரசிகர்கள் நினைவில் இருக்கும் பாடலாக உள்ளது. தொடர்ந்து இவர் தயாரித்து நடித்த 'மீண்டும் ஒரு காதல் கதை' திரைப்படம் இயக்குனரின் சிறந்த அறிமுகப் படத்திற்கான இந்திரா காந்தி விருதை வென்றது . நடிகை ராதிகா, தமிழ், தெலுங்கி, இந்தி என பல மொழிகளில் 100க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். இவர் வெள்ளித்திரை மட்டுமல்லாமல் சின்னத்திரையிலும் பல தொடர்களை இயக்கி நடித்துள்ளார். தேசிய விருது, பிலிம் பேர் விருது என பல விருதுகளை குவித்துள்ள ராதிகா இன்றும் தன் நடிப்பு திறமையால் மிளிர்கிறார். இந்நிலையில், நடிகை ராதிகா திரைத்துறையில் அறிமுகமாகி 45 ஆண்டுகள் கடந்துள்ளது. இதனை அவர் தன் கணவர் சரத்குமாருடன் கேக் வெட்டி கொண்டாடியுள்ளார். இது தொடர்பான புகைப்படம் சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது.



# லட்சுமி மேனனுடன் திடீர் திருமணம்.. விளக்கமளித்த விஷால்

தமிழ் திரையுலகின் முன்னணி நடிகராக வலம் வருபவர் விஷால். விஷால் நடிப்பில் மட்டுமல்லாது பல்வேறு சமூக நல பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார்.

செல்லமே படத்தின் மூலம் திரையுலகிற்கு கதாநாயகனாக அறிமுகமானவர் விஷால்.

அதன்பின்னர் சண்டக்கோழி, திமிரு, சத்யம், அவன் இவன், தாமிரபரணி, துப்பறிவாளன் உள்ளிட்ட பல படங்களில் நடித்து முன்னணி நடிகராக வலம் வருகிறார். விஷால் நடிப்பில் மட்டுமல்லாது பல்வேறு சமூக நல பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார். சில நாட்களாக நடிகர் விஷால் நடிகை லட்சுமி மேனன் இருவரும் காதலித்து வருவதாகவும் இவர்கள் இருவருக்கும் விரைவில் திருமணம் நடைபெறவுள்ளதாகவும் சமூக வலைதளத்தில் தகவல் பரவி வருகிறது.

இந்நிலையில், இந்த தகவலுக்கு மறுப்பு தெரிவித்து விஷால் பதிவு ஒன்றை பகிர்ந்துள்ளார். அதில், "பொதுவாக என்னைப் பற்றிய வதந்திகளுக்கு நான் பதிலளிப்பதில்லை. அப்படி செய்வது பயனற்றது என்று நான் நினைக்கிறேன். ஆனால் தற்போது நடிகை லட்சுமி மேனன் உடன் எனக்கு திருமணம் என்று பரவி வரும் செய்தியை நான் முற்றிலுமாக மறுக்கிறேன். இந்த செய்தி முழுக்க முழுக்க ஆதாரமற்றது. என்னுடைய இந்த விளக்கத்துக்கு காரணம், இதில் சம்பந்த ப்பட்டிருப்பவர் ஒரு நடிகை என்பதை விட முதலில் அவர் ஒரு பெண். நீங்கள் ஒரு பெண்ணின் தனிப்பட்ட வாழ்க்கையை சிதைத்து அவருடைய அடையாளத்தை கெடுக்கிறீர்கள். ஆண்டு, தேதி, நேரம் மற்றும் எதிர்காலத்தில் நான் யாரை திருமணம் செய்யப்போகிறேன் என்பதை ஆராய்வதற்கு அது ஒன்றும் பெர்முடா முக்கோணம் அல்ல. நேரம் வரும்போது எனது திருமணம் குறித்து அதிகாரபூர்வமாக அறிவிப்பேன். கடவுள் ஆசிர்வதிக்கட்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.






# ஆகஸ்ட் ரேஸில் இருந்து பின்வாங்கிய சந்தானம்.. அதிரடி முடிவெடுத்த படக்குழு

நடிகர் சந்தானம் தற்போது 'கிக்' திரைப்படத்தில் நடித்துள்ளார். இப்படத்தை பிரபல கன்னட இயக்குனர் பிரசாந்த் ராஜ் இயக்கியுள்ளார்.

பிரபல கன்னட இயக்குனர் பிரசாந்த் ராஜ் இயக்கத்தில் உருவாகியுள்ள 'கிக்' படத்தில் நடிகர் சந்தானம் கதாநாயகனாக நடித்துள்ளார். தமிழ் மற்றும் கன்னடம் என இருமொழிப் படமாக உருவாகியுள்ள இந்த படத்தில் தன்யா ஹோப், ராகினி திவிவேதி இருவரும் கதாநாயகிகளாக நடித்துள்ளனர். பார்டியூன் பிலிம்ஸ் பட நிறுவனம் சார்பில் நவீன்ராஜ் தயாரிக்கும் இந்த படத்திற்கு அர்ஜுன் ஜனயா இசையமைத்துள்ளார். சுதாகர் ராஜ் ஒளிப்பதிவு செய்துள்ளார். நாகூரன் ராமச்சந்திரன் படத்தொகுப்பு பணிகளை மேற்கொண்டுள்ளார். இப்படத்திற்கு தணிக்கை குழு சமீபத்தில் யு/ஏ சான்றிதழ் வழங்கியது. கிக் போஸ்டர் 'கிக்'திரைப்படம்ஆகஸ்ட்மாதம்ரிலீஸாகும்எனபடக்குழுஅறிவித்திருந்த நிலையில், இப்படத்தின் ரிலீஸ் தேதி மாற்றப்பட்டுள்ளது. அதன்படி, 'கிக்' திரைப்படம் வருகிற செப்டம்பர் 1ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது. இதனை படக்குழு போஸ்டர் வெளியிட்டு அறிவித்துள்ளனர்.

# 'ஜெயிலர்' படத்தின் முதல் நாள் வசூல் இத்தனை கோடியா?

ரஜினிநடிப்பில்ஆகஸ்ட்10திரையரங்குகளில்வெளியானதிரைப்படம் 'ஜெயிலர்'. இப்படம் ரசிகர்களின் வரவேற்பை பெற்று வசூலை குவித்து வருகிறது.

நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் ரஜினி நடிப்பில் உருவாகியுள்ள 'ஜெயிலர்' திரைப்படம் நேற்று திரையரங்குகளில் வெளியாகியுள்ளது. இதில் மலையாள நடிகர் மோகன்லால், கன்னட நடிகர் சிவராஜ்குமார் மற்றும் பிரியங்கா மோகன், ரம்யா கிருஷ்ணன், யோகிபாபு, வசந்த் ரவி, விநாயகன் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். பெரும் எதிர்பார்ப்பில் உருவாகியுள்ளஇப்படத்தைரசிகர்கள்திரையரங்குகளில் கொண்டாடி வருகின்றனர். இந்நிலையில், 'ஜெயிலர்' படத்தின் முதல் நாள் வசூல் குறித்த தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, இப்படம்தமிழ்நாட்டில் ரூ.25 கோடியும் உலக அளவில் ரூ.90 கோடியும் வசூல் செய்துள்ளதாக கூறப்படுகிறது. இந்த தகவல் ரஜினி ரசிகர்களை உற்சாகப்படுத்தியுள்ளது.



# அடுத்த ஆக்ஷன் படத்தை இயக்கும் கமல்ஹாசன் பட இயக்குனர்

இயக்குனர் ராஜேஷ் எம் செல்வா புதிய படம் ஒன்றை இயக்குகிறார். இப்படத்திற்கு சைமன் கே கிங் இசையமைக்கிறார்.

கமல்ஹாசனின் 'தூங்கா வனம்' மற்றும் விக்ரமின் 'கடாரம் கொண்டான்' படங்களை இயக்கிய இயக்குனர் ராஜேஷ் எம் செல்வா தற்போது புதிய படம் ஒன்றை இயக்குகிறார். இதில் அதிதி ராவ் ஹைதாரி, கெட்டிகா சர்மா மற்றும் அன்சன் பால் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். இன்னும் பெயரிடப்படாத இப்படத்தை அல்லு அரவிந்தின் ஆஹா ஸ்டுடியோஸ் மற்றும் குளோபல் ஒன் ஸ்டுடியோஸ் ரமேஷுடன் இணைந்து ரூக்ஸ் தயாரிக்கிறார். அதிரடி ஆக்ஷன் படமாக உருவாகும் இப்படத்தின் படப்பிடிப்பு சென்னை மற்றும் டெல்லியில் நடைபெறவுள்ளது.

சைமன் கே கிங் இசையமைக்கும் இப்படத்திற்கு சுனோஜ் வேலாயுதம் ஒளிப்பதிவு செய்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பு எளிமையான பூஜையுடன் துவங்கி, தற்போது விறுவிறுப்பாக நடந்து வருகிறது. மேலும், இப்படம் பார்வையாளர்களுக்கு ஒரு வித்தியாசமான அனுபவத்தை வழங்கும் என்று படக்குழு உறுதியளித்துள்ளனர்.



# கடைசி 3 பந்தில் 3 ரன் தேவை: ஹாட்ரிக் விக்கெட் எடுத்து அசத்திய இஸ்மாயில் வீடியோ

வெல்ஸ் பயர் அணி 3 ரன்கள் வித்தியாசத்தில் த்ரில் வெற்றி பெற்றது. கடைசி மூன்று பந்துகளில் 3 ரன்கள் தேவை என்ற நிலையில் ஹாட்ரிக் விக்கெட்டை எடுத்து ஷப்னிம் இஸ்மாயில் அசத்தினார்.

பெண்களுக்கான 100 பந்து போட்டி இங்கிலாந்தில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடந்த ஆட்டம் ஒன்றில் பர்மிங்காம் பீனிக்ஸ் மற்றும் வெல்ஷ் பயர் அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற பர்மிங்காம் பீனிக்ஸ் அணி பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதலில் களமிறங்கிய வெல்ஷ் பயர் அணி 100 பந்துகளில் 7 விக்கெட்டுகளை இழந்து 137 ரன்கள் எடுத்தது. இதனையடுத்து களமிறங்கிய பர்மிங்காம் பீனிக்ஸ் 100 பந்துகளில் 4 விக்கெட்டுகளை இழந்து 134 ரன்கள் மட்டுமே எடுத்தது. கடைசி ஓவரில் 8 ரன்கள் தேவைப்பட்ட நிலையில் அந்த ஓவரை ஷப்னிம் இஸ்மாயில் வீசினார். முதல் பந்தில் 1 ரன்களும் 2வது பந்தில் பவுண்டரி அடிக்கப்பட்டது. அடுத்த மூன்று பந்துகளில் 3 ரன்கள் தேவை என்ற நிலையில் ஹாட்ரிக் விக்கெட்டை எடுத்து அணியின் வெற்றி ஷப்னிம் இஸ்மாயில் முக்கிய பங்காற்றினார். இதன்மூலம் வெல்ஸ் பயர் அணி 3 ரன்கள் வித்தியாசத்தில் த்ரில் வெற்றி பெற்றது.

# டி20 தொடரை கைப்பற்றும் முனைப்பில் வெஸ்ட் இண்டீஸ் இந்தியாவுடன் இன்று மோதல்

தொடரை இழக்காமல் இருக்க நாளைய ஆட்டத்தில் இந்தியா வெற்றி பெற வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. சஞ்சு சாம்சனும் ரன்கள் எடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளார்.

லாடர்ஹில்: இந்திய கிரிக்கெட் அணி வெஸ்ட் இண்டீசில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டி தொடர்களை இந்தியா கைப்பற்றியது. இரு அணிகளும் 5 ஆட்டம் கொண்ட 20 ஓவர் போட்டி தொடரில் விளையாடி வருகிறது. முதல் 2 போட்டிகளில் வெஸ்ட் இண்டீஸ் வெற்றிபெற்றது. 3வது போட்டியில் இந்தியா 7 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது. வெஸ்ட் இண்டீஸ் 21 என்ற கணக்கில் முன்னிலையில் உள்ளது. இந்தியாவெஸ்ட் இண்டீஸ் அணிகள் மோதும் 4வது 20 ஓவர் போட்டி நாளை நடக்கிறது. அமெரிக்காவின் புளோரிடா மாகாணம் லாடர்ஹிலில் நடக்கும் இப்போட்டி இந்திய நேரப்படி நாளை இரவு 8 மணிக்கு தொடங்குகிறது. தொடரை இழக்காமல் இருக்கநாளைய ஆட்டத்தில்இந்தியாவெற்றிபெற வேண்டியகட்டாயத்தில்உள்ளது. தோற்றால்தொடரைஇழந்துவிடும். ஹர்த்திக் பாண்ட்யா தலைமையிலான இந்திய அணியில் சூர்யகுமார் யாதவ், திலக் வர்மா ஆகியோர் நல்ல நிலையில் உள்ளனர். தொடக்க வீரர் சுப்மன் கில் ரன் குவிக்க திணறி வருகிறார். அதேபோல் சஞ்சு சாம்சனும் ரன்கள் எடுக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளார். பந்து வீச்சில் அர்ஷ்தீப் சிங், குல்தீப் யாதவ், சாகல், அக்ஷர் பட்டேல் ஆகியோர் உள்ளனர். கடந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றுள்ளதால் அந்த உத்வேகத்துடன் இந்தியா களம் இறங்கும். ரோமன் பாவெல் தலைமையிலான வெஸ்ட் இண்டீஸ் அணி பேட்டிங் கில் பிரண்டன் கிங், நிக்கோலஸ் பூரன், ஹெட்மயர், மேயர்ஸ் ஆகியோர் உள்ளனர். பந்து வீச்சில் மெக்காய், ஷெப்பர்ட், ஜோசன், ஹூசன் ஆகியோர் உள்ளனர். நாளைய ஆட்டத்தில் வெற்றி பெற்று 20 ஓவர் போட்டி தொடரை கைப்பற்றும் முனைப்பில் வெஸ்ட் இண்டீஸ் உள்ளது. ஆனால் வெற்றிக்காக அந்த அணி கடுமையாக போராடும் என்பதால் போட்டி விறுவிறுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





# உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப்: பி.வி.சிந்துவுக்கு முதல் சுற்றில் பை சலுகை

28வது உலக பேட்மிண்டன் சாம்பியன்ஷிப் போட்டி வருகிற 21ந்தேதி முதல் 27ந்தேதி வரை டென்மார்க் தலைநகர் ஹோபன்ஹேகனில் நடைபெறுகிறது. இதில் யார்யாருடன் மோதுவது என்பது குலுக்கல் மூலம் (டிரா) நேற்று முடிவு செய்யப்பட்டது. இதன்படி பெண்கள் ஒற்றையர் பிரிவில் பங்கேற்கும் ஒரே இந்தியரான பி.வி.சிந்துவுக்கு நேரடியாக 2வது சுற்றில் களம்இறங்கும் வகையில் முதல் சுற்றில் 'பை சலுகை' வழங்கப்பட்டுள்ளது. என்றாலும் அடுத்தடுத்து சுற்றுகள் சிந்துவுக்கு கடினமாக அமைந்துள்ளது. அவர் 2வது சுற்றில் முன்னாள் சாம்பியன் நஜோமி ஒகுஹராவை (ஜப்பான்) சந்திக்க வாய்ப்புள்ளது. அந்த தடையை வெற்றிகரமாக கடந்தால் பலம் வாய்ந்த தாய்லாந்தின் ராட்சனோக் இன்டானோன், 'நம்பர் ஒன்' புயல் அன்சே யங்கை (தென்கொரியா) ஆகியோரை எதிர்கொள்ள நேரிடலாம். கடந்த ஓராண்டாக எந்த பட்டமும் வெல்ல முடியாமல் திண்டாடும் சிந்து தொடர்ச்சியான தோல்விகளால் உலக தரவரிசையில் 15வது இடத்துக்கு தள்ளப்பட்டார். உலக சாம்பியன்ஷிப் பட்டத்தை 2019ம் ஆண்டில் வென்று வரலாறு படைத்த சிந்து மீண்டும் அதே போல் அசத்துவாரா என்பதே ரசிகர்களின் எதிர்பார்ப்பாகும். நடப்பு சாம்பியன் அகானே யமாகுச்சி (ஜப்பான்), ஒலிம்பிக் சாம்பியன் சென் யுபே (சீனா), முன்னாள் நம்பர் ஒன் நட்சத்திரங்கள் தாய் ஜூ யிங் (சீனதைபே), கரோலினா மரின் (ஸ்பெயின்) உள்ளிட்டோரும் வரிந்து கட்டுவதால் சிந்துவுக்கு கடும் சவால் காத்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இந்திய தரப்பில் எச்.எஸ்.பிரனாய், லக்ஷயா சென், ஸ்ரீகாந்த் ஆகியோர் விளையாடுகிறார்கள். சமீபகாலமாக தொடர்ந்து நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் 9ம் நிலை வீரரான பிரனாய் முதல் சுற்றில் காலே கோல்ஜோனெனை (பின்லாந்து) சந்திக்கிறார். முன்னாள் நம்பர் ஒன் வீரர் ஸ்ரீகாந்த், ஜப்பானின் கென்டோ நிஷிமோட்டோவுடன் சவாலை தொடங்குகிறார். காமன்வெல்த் விளையாட்டு சாம்பியனான லக்ஷயா சென் முதல் ரவுண்டில் ஜார்ஜெஸ் ஜூலியன் பாலுடன் (மொரீசியஸ்) களம் காணுகிறார். ஒலிம்பிக் சாம்பியனும், நம்பர் ஒன் வீரருமான விக்டர் ஆக்சல்சென் (டென்மார்க்) முதல் சுற்றில் 36ம் நிலை வீரர் நேட் நுயேனுடன் (அயர்லாந்து) மோதுகிறார். இரட்டையரில் 5 இந்திய ஜோடிகள் ஆடுகிறது. இதில் உலகத் தரவரிசையில் 2வது இடத்தை பெற்று கவனத்தை ஈர்த்துள்ள சாத்விக் சாய்ராஜ் ரங்கிரெட்டி சிராக் ஷெட்டி, பெண்கள் இரட்டையரில் திரிஷா ஜாலி, காயத்ரி கோபிசந்த் ஆகிய ஜோடிகள் நேரடியாக 2வது ரவுண்டில் கால்பதிக்கின்றன. அஸ்வினி பாத் ஷிகா கவுதம், ரோகன் கபூர் சிக்கிரெட்டி, வெங்கட் பிரசாத் ஜூஹி தேவாங்கன் ஆகியோரும் களம் இறங்குகிறார்கள்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.